ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2042/21 - 2017 ඔක්තෝබර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.10.26

*2042/21 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டம்*

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரிவு 64 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 75 இன் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள். இத்தகைய ஒழுங்குவிதிகள் பிரிவுகளின் தொழிற்பாட்டுக்காக பயனுறுதியுடன் தொழிற்படுவதுடன் 1998 ஏப்பிறல் 21 ஆந் திகதிய 1024/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர்.*

*கொழும்பு 01,*
*2017, ஒற்றோபர் 25.*

### ஒழுங்குவிதிகள்

*1.* இத்தகைய ஒழுங்குவிதிகள் *2016* ஆம் ஆண்டின் *1* ஆம் இலக்க "பதிவேட்டினைப் பேணும் ஒழுங்குவிதிகள்" எனக் குறித்துரைக்கப்படலாம்.

*2.* ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட ஆளும் பெறுமதி சேர் வரிச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறு (இதனகத்துப் பின்னர் பெசேவ சட்டம் எனக் குறித்துரைக்கப்படும்), ஏதேனும் வரி விதிக்கத்தக்க வழங்கல், கருதப்பட்ட வரி விதிக்கத்தக்க வழங்கல், வெளியகற்றப்பட்ட வழங்கல் அல்லது விலக்களிப்புப் பெற்ற வழங்கல் மற்றும் தொடர் ஒழுங்கில் இன்னொரு ஆளொருவருக்கு அல்லது பங்குடமையொன்றிற்கு வழங்கப்பட்ட வரி விபரப்பட்டியல் அல்லது இடைநிறுத்தப்பட்ட விபரப்பட்டியல் அல்லது வர்த்தகசார் விலை விபரப்பட்டியலின் அடிப்படையில், இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி திட்ட (இதனகத்துப் பின்னர் இபெசேவ திட்டம் எனக் குறித்துரைக்கப்படும்) நோக்கத்தற்காக பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் வரையறுக்கப்பட்டவாறான இடைநிறுத்தப்பட்ட வழங்கல் அல்லது இடைநிறுத்தப்பட்ட வழங்கல் தொடர்பிலான பதிவேடுகளினை வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

*3.* (i) ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட ஆளினாலும்;

(அ) இரு நாள் வரையில்;

(ஆ) செலுத்தத்தக்க வரிப் பொறுப்பினைக் கணிப்பீடு செய்யும் பொருட்டு உள்ளீடு மற்றும் வெளியீடு வரி தொடர்பான போதுமான தகவல்களுடன்;

1A - PG 3733 - 507 (2017/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(இ) உதவி ஆணையாளரினால் செவ்வை பார்ப்பதற்கு இலகுவாக்கும் பொருட்டு;

(i) ஒத்தி வைக்கப்பட்ட, முன்கூட்டியே மேற்கொள்ளப்பட்ட, விலக்களிக்கப் பெற்ற, நீக்கப்பட்ட அல்லது அந்நியச் செலாவணியல்லா அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதி;

(ii) பெறுமதி சேர் வரி ஒத்திவைக்கப்பட்ட, இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள், இடைநிறுத்தப்பட்டதாக கருதப்படும் வழங்கல்கள் அல்லது இடைநிறுத்தப்பட்ட கொள்வனவுகள்;

(iii) பெசேவ சட்டத்தின் பிரிவு 22(10) இல் குறிப்பிடப்பட்ட கருதப்பட்ட வரி விதிக்கத்தக்க வழங்கல்கள்;

(iv) விசேட கருத்திட்டங்கள் மற்றும் உபாய விருத்திக் கருத்திட்டங்கள் என்பவற்றிற்கு மேற்கொள்ளப்பட்ட கருதப்பட்ட வரி விதிக்கத்தக்க வழங்கல்கள் மீதான வரி வரவுகள், அல்லது இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் மீதான கருதப்பட்ட வரி வரவு;

(v) மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபார நடவடிக்கை தொடர்பில் பெசேவ பதிவை 2016 மே மாதம் 2 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பெற்றுக் கொண்டுள்ள ஆட்களினால் 2016.11.01 இன் பின்னர் கோரத்தக்கதான கருதப்பட்ட உள்ளீட்டு வரி வரவுகள்;

(vi) சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விபரத்திரட்டுக்களுடன் கூடிய பதிவேடுகள்;

அனைத்துப் பதிவேடுகளும் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

4. ஒன்றிற்கு மேற்பட்ட வியாபார இடங்களினைக் கொண்டிருக்கின்ற பதிவு செய்யப்பட்ட ஆளொருவராக இருக்குமிடத்து, அத்தகைய வியாபார இடங்களின் பெயர் மற்றும் முகவரி என்பன வரி விதிக்கத்தக்க வியாபார நடவடிக்கையானது மேற்கொள்ளப்படுகின்ற பிரதான இடத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

5. ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட ஆளும், அத்தகைய ஆளினால் மேற்கொள்ளப்படும் கோரிக்கை அல்லது செலுத்த வேண்டிய வரியின் அளவினைத் தீர்மானிப்பதில் உதவக்கூடிய வரி விதிக்கத்தக்க வழங்கல்களுடன் தொடர்புடைய அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களின் பதிவேடுகளினை வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும். அத்துடன், அவை பின்வருவனவற்றினையும் உள்ளடக்கியிருத்தலும் வேண்டும்.

(i) வரி அறவீடு செய்யப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான ஒவ்வொரு வழங்கல்;

(ii) ஒவ்வொரு இறக்குமதி அல்லது அத்தகைய இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் பிணைக்கப்பட்ட பிரதேசத்தில் காணப்படுமாயின் அவற்றின் அகற்றுகை;

(iii) பூச்சிய வீதமளிக்கப்பட்ட வழங்கல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வழங்கல்கள் உள்ளடங்கலாக பதிவு செய்யப்பட்ட ஆளினால் வழங்கப்பட்ட அனைத்து வழங்கல்களும்;

(iv) இடைநிறுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வழங்கல்கள்;

(v) வரி விதிக்கத்தக்க வழங்கல்களாக கருதப்படும் அனைத்து வழங்கல்கள்;

(vi) இடைநிறுத்தப்பட்ட வழங்கல்களாக கருதப்படுவனவற்றின் கீழ் கருத்தில் கொள்ளப்பட்ட அனைத்து வழங்கல்கள்;

(vii) பரிசாக அல்லது கடனாகப் பெற்றுக் கொண்ட பொருட்கள்;

(viii) பொருட்களின் ஏதேனும் சேதமடைந்தவை அல்லது அழிவடைந்தவை;

(ix) தனிப்பட்ட முறையில் அல்லது வரியல்லாப் பயன்பாட்டுக்கென வைத்திருக்கப்படும் வரி விதிக்கத்தக்க வழங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்ற காலப்பகுதியில் கொள்ளல் செய்யப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் பொருட்கள்;

(x) செலவுத்தாள்கள்/அல்லது வரவுத்தாள்கள் வழங்குதல்/பெறுதல், அறவிடமுடியாக் கடன்களைப் பதிவளிப்புச் செய்தல் மற்றும் முன்னதாக பதவளிப்புச் செய்யப்பட்ட அறவிட முடியாக் கடன்களை மீள அறவீடு செய்தல் உள்ளடங்கலான பதிவுகளினைப் பேணுவதற்கான ஏதேனும் சீராக்கல்கள்.

6. சட்டத்தின் 64 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் அத்தகைய கணக்குப் புத்தகங்களிலுள்ள பதிவுகளினை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையானதாக காணப்படுகின்ற அத்தகைய மற்றைய ஆவணமானது கணிப்பீட்டுத் தாள்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

7. (i) பதிவேடுகள் வெளியீட்டு மற்றும் உள்ளீட்டு வரி விபரங்கள் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வரி விதிக்கத்தக்க காலப்பகுதி தொடர்பிலும் பேணப்படுதல் வேண்டும். காலாண்டுக்கான விபரத்திரட்டுக்களினைப் பொறுத்தவரையில், பதிவுகள் மாதாந்த அடிப்படையில் பேணப்படுதல் வேண்டும்.

(ii) சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரி தொடர்பில் பேணப்பட வேண்டிய அல்லது வைதிருக்கப்பட வேண்டிய கணக்கு வடிவமானது இணைப்பில் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(iii) சட்டத்தின் கீழ் அனுமதிக்கத்தக்க உள்ளீட்டு வரியானது தனித்தனியாக விதித்துரைக்கப்படுதல் வேண்டும். இது பின்வருவனவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(அ) பெற்றுக் கொண்ட பொருட்கள் அல்லது சேவைகள் மீது அறவிடப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட உள்ளீட்டு வரி

(ஆ) பிணைக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து நீக்கப்பட்ட பொருட்கள் உள்ளடங்கலான இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான உள்ளீட்டு வரி

(இ) அறவிடமுடியாக் கடன்கள் அல்லது ஏனைய சீராக்கல்கள் மீது செலுத்த வேண்டிய ஏதேனும் நிவாரணம்

(ஈ) உதவி ஆணையாளரினால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பம் தவிர்த்து, முன்னைய வரி விதிக்கத்தக்க காலப்பகுதிகளிலிருந்தான மிகையான கணிப்பீடுகள்

(உ) கோரிக்கை விடுக்கப்படுவதற்கு ஏற்புடைய 2010.12.31 அன்று உறிஞ்சிக்கொள்ளப்படாத உள்ளீட்டு வரித் தொகை அல்லது முன்னைய வரிக் காலப்பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட ஏதேனும் உள்ளீட்டு வரி, ஏற்புடையதாயின்,

(ஊ) பதிவு செய்யப்பட்ட ஆளொருவரினால் மொத்த விற்பனை அல்லது சில்லறை வியாபாரத்தில் விற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள் தொடர்பில் கருதப்பட்ட உள்ளீட்டு வரவு.

- 2016.05.02 இலிருந்து 2016.12.31 வரையிலான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்படும் அத்தகைய பதிவு செய்தலாயின், பெசேவ சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்படாத பதிவு செய்தல் திகதியிலுள்ளவாறு பொறுப்பாகும் பொருட்களின் இருப்புக்களின் மீது
- பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதும் பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் முதலாவது அட்டவணையின் பகுதி II இல் குறிப்பிடப்படாத பொருட்களின் மீது 2016 மே 02 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் பதிவு செய்தலாயின்,

(iv) இபெசேவ திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இடைநிறுத்தப்பட்ட கொள்வனவு மற்றும் விதித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காகவோ அல்லது விதித்துரைக்கப்பட்ட நோக்கம் எனக் கருதப்படுபவைக்காகவோ பயன்படுத்தப்படும் அத்தகைய கொள்வனவு.

(v) பெசேவ சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்கதான வெளியீட்டு வரியானது தனித்தனியாக செய்து காட்டப்படுதல் வேண்டும்.

(அ) பொருட்கள் அல்லது சேவை வழங்கல்கள் மீது செலுத்தத்தக்க வெளியீட்டு வரி

(ஆ) சுய வழங்கல்கள் அல்லது ஏனைய சீராக்கல்கள் மீது செலுத்த வேண்டிய வரி

(இ) உதவி ஆணையாளரினால் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து, முன்னைய வரி விதிக்கத்தக்க காலப்பகுதிகளிலிருந்து கழிக்கப்பட்ட வரிக் கணிப்பீடுகள்

(ஈ) இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் மீது பெறப்பட்ட அனைத்து வரவு வவுச்சர்கள்

8. ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட ஆளும் பதிவுகளினைப் பேணிக் கொள்வதுடன் பெறுமதி சேர் வரி விபரத்திரட்டுடன் ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கும் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணைகளைத் தயாரித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(அ) அட்டவணை 01 (வெளியீட்டு அட்டவணை) இன் படியான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

(i) அனைத்து வரி விபரப்பட்டியல்களுக்கும் ஒவ்வொரு பதிவு.

(ii) இணைய நுழைவாயிலில் பதிவேற்றப்பட்ட துரித வழிகாட்டியில் குறிப்பிடப்பட்ட போலியான வரி செலுத்துனர் அடையாள இலக்கத்தினை வழங்குகின்ற அனைத்து வரி விபரப்பட்டியல்களுக்கும் ஒரே பதிவு

(iii) இணைய நுழைவாயிலில் பதிவேற்றப்பட்ட துரித வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டவாறான அனைத்து அத்தகைய பதிவுகளுக்கு உரித்தளிக்கப்பட்ட போலியான வரி செலுத்துனர் அடையாள இலக்கம் வழங்குகின்ற, பெறுமதி சேர் வரிக்குப் பதிவு செய்துகொள்ளாத அரசாங்க நிறுவனங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட வழங்கல்களுக்கான ஒவ்வொரு பதிவு

(ஆ) அட்டவணை 02 (உள்நாட்டுக் கொள்வனவுக்கான உள்ளீட்டு அட்டவணை)

(இ) அட்டவணை 03 (இறக்குமதிகளுக்கான உள்ளீட்டு அட்டவணை)

(ஈ) அட்டவணை 04 (செலவுத் தாள்கள் மற்றும் வரவுத் தாள்களுக்கான அட்டவணை)

(உ) கருதப்பட்ட உள்ளீட்டு வரி மீதான அட்டவணைகள்,

(i) அட்டவணை 05 ஆனது கோரத்தக்க கருதப்பட்ட உள்ளீட்டு வரவுக்காக மட்டும் தயாரிக்கப்படுவதுடன், ஏதேனும் உரிய வரி விதிக்கத்தக்க காலப்பகுதிக்கான பெசேவ விபரத்தரட்டுடன் ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவேண்டிய வடிவமாகும்.

(ii) பதிவு செய்தல் திகதியிலுள்ளவாறான ஆரம்ப இருப்பின் மீதான கருதப்பட்ட உள்ளீட்டுப் பெறுமதி சேர் வரிக்கான அட்டவணை ஆரம்ப இருப்புக்களின் மீது கோரத்தக்க கருதப்பட்ட உள்ளீட்டு வரிக்காக மட்டும் தயாரிக்கப்படுவதுடன், இதனை உள்நாட்டு இறைவரித் திணைக்கள இணையத்தில் ஒரு தடவை மட்டும் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

(iii) வரி விதிக்கத்தக்க காலப்பகுதியில் பெசேவ பதிவு செய்து கொள்ளாத ஆட்களிடமிருந்து மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவுகளின் மீதான கருதப்பட்ட உள்ளீட்டு பெறுமதி சேர் வரிக்கான அட்டவணையானது பதிவு செய்யப்படாத ஆட்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் மீது கோரத்தக்க கருதப்பட்ட உள்ளீட்டு வரிக்காக மட்டும் தயாரிக்கப்பட்டுப் பேணப்படுகின்றதுடன் இந்த அட்டவணையானது ஏதேனும் வரி விதிக்கத்தக்க காலப்பகுதிக்கான பெசேவ விபரத்திரட்டுடன் ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்குமாறு கோரப்படுவதில்லை.

(iv) விடயம் (i), (ii) மற்றும் (iii) இல் குறிப்பிடப்பட்ட மேற்படி அட்டவணைகள் மொத்த விற்பனை அல்லது சில்லறை வியாபார நடவடிக்கைகள் மீது 2016 மே 02 ஆந் திகதியின் பின்னர் பெசேவ பதிவு செய்தலினைப் பெற்றுக் கொண்டுள்ள ஆட்களுக்கு மட்டும் ஏற்புடையதாகின்றன.

(v) அட்டவணைகளினைச் சமர்ப்பிக்கும் போது, இலத்திரனியல் சேவைக்காக ஆணையாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்பட்ட சட்டவிதிகள் அவ்விதமே ஏற்புடையதாகும்.

மேற்படி அட்டவணைகளின் எழுத்து வார்ப்புருக்கள் இணைய நுழைவாயிலில் கிடைக்கக் கூடியதாக உள்ளதுடன், பிந்திய பொருத்தமான அட்டவணை எழுத்து வார்ப்புருப்பினைப் பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய அட்டவணைகளினைத் தயாரிக்குமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

9. ஒவ்வொரு பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரும் (RIP), ஒவ்வொரு பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரும் (RIS) கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணைகளினைத் தயாரித்து பதிவேடுகளினைப் பேணுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(i) SVAT 05 அட்டவணை

(ii) SVAT 05 (அ) அட்டவணை

(iii) SVAT 05 (ஆ) அட்டவணை

(iv) SVAT 06 அட்டவணை

(v) SVAT 07 அட்டவணை

மேற்படி அட்டவணைகளின் எழுத்து வார்ப்புருக்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் இணையத்தில் கிடைக்கக் கூடியதாக வுள்ளதுடன், பிந்திய பொருத்தமான அட்டவணை எழுத்து வார்ப்பினைப் பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய அட்டவணைகளினைத் தயாரிக்குமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

10. ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், அனுமதிக்கப்படாத கொள்வனவு தொடர்பில் ஒவ்வொரு RIP யும் பதிவுகளினைப் பேணிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், இடைநிறுத்தப்பட்ட கொள்வனவு மீது விநியோகிக்கப்பட்ட வரவு வவுச்சர் தொடர்பான பதிவுகளினைப் பேணுமாறும் கோரப்படுகின்றனர்.

11. இடைநிறுத்தப்பட்ட வழங்கலின் மீது பெற்றுக் கொள்ளப்பட்ட வரவு வவுச்சர்கள் தொடர்பான பதிவேடுகளினைப் பேணிக் கொள்ளுமாறு ஒவ்வொரு பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட கொள்வனவாளரும் (RIP), பதிவு செய்யப்பட்டு இனங்காணப்பட்ட வழங்குனரும் (RIS) கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

12. கணக்குப் புத்தகங்களினைப் பேணுகின்ற அல்லது வைத்திருக்கின்ற ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட ஆளும் இயைபான காலப்பகுதிக்காக மேற்கொள்ளப்படவேண்டிய செலுத்தத்தக்க வரி அல்லது மீளளிப்புத் தொகையினைக் கணிப்பீடு செய்வதற்காக அத்தகைய கணக்குகளை சமப்பித்தல் வேண்டும்.

13. கழிக்கத்தக்க வரி அல்லது செலுத்தத்தக்க வரியினைக் கணிப்பீடு செய்வதற்கு தேவையான கணிப்பீட்டுத் தாள்களும் ஒவ்வொரு பதிவு தொடர்பிலும் தனித்தனியாகப் பேணப்படுதல் வேண்டும். இது பின்வருவனவற்றினையும் உள்ளடக்கும்.

(i) வழங்கல்கள் மீது அறவிடத்தக்க வரித் தொகை

(ii) வரி நீங்கலான வழங்கல் பெறுமதி

(iii) மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் வரி விலக்களிப்புப் பெற்ற/வரி விதிக்கத்தகாத மொத்த விற்பனை அல்லது சில்லறை வழங்கல்களின் பெறுமதி

(iv) வழங்கல்கள் மீது இடைநிறுத்தப்பட்ட வரித் தொகை

(v) அனைத்து சீராக்கல்களின் விபரம்

(vi) பெற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து வரி விதிக்கத்தக்க வழங்கல்களின் பதிவு

(vii) ஆணையாளர் நாயகத்திடமிருந்து இலகுபடுத்தப்பட்ட பெபேவ வரவு வவுச்சர்களினைப் (SVCV) பெற்றுக் கொள்ளுதலும் இடைநிறுத்தப்பட்ட கொள்வனவு மீது அத்தகைய வரவு SVCV வவுச்சர்களினை வழங்குதலும்

(viii) கருதப்பட்ட உள்ளீட்டு வரவாக கோரப்பட வேண்டிய தொகை

14. பதிவுகள் விபரமாக அல்லது ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் உரிய முறையில் வைத்திருக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும். அத்துடன், வரித் தொகை அல்லது இடைநிறுத்தப்பட்ட வரி என்பன முழுமையாகப் பதிவு செய்யப்படுகின்றன அல்லது வழங்குனரின் வரி விபரப்பட்டியலில் அல்லது இடைநிறுத்தப்பட்ட வரி விபரப்பட்டியலில் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீதான வரி சான்றின் குறிப்பீடு செய்வதன் மூலம் இலகுவான கணிப்பீடு செய்யப்பட முடியும்.

15. **காசு அடிப்படையிலான கணக்கீடு** - காசு அடிப்படையிலான கணக்கீட்டு முறையினைப் பின்பற்றுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் அனுமதியளிக்கப்படுகின்ற பதிவு செய்யப்பட்ட ஆட்கள் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் செலுத்தப்பட்ட அல்லது பெறப்பட்ட காசினைக் குறிப்பிடுவதற்குத் தமது பதிவேடுகளில் வேறானதொரு நிரலினைப் பேணுதல் வேண்டும்.

16. **பெசேவ கட்டுப்பாட்டுக் கணக்கு** - பெசேவ கட்டுப்பாட்டுக் கணக்கானது பதிவு செய்யப்பட்ட ஆளொருவரினால் பெறப்பட்ட அல்லது பெறத்தக்க அனைத்து பெறுமதி சேர் வரியினையும் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தத்தக்க அனைத்து பெறுமதி சேர் வரியினையும் கொண்டிருத்தல் வேண்டும். பின்வரும் (குறைந்தபட்சம்) விபரங்கள் இக்கணக்கில் பதியப்பட வேண்டும்.

**பெறுமதி சேர் வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கு**

| திகதி | விபரம் | பேரேட்டு இல. | தொகை | திகதி | விபரம் | பேரட்டு இல. | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

17. மேலே குறிப்பிடப்பட்ட பதிவேடுகளின் பேணுதல் தவிர, எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆள் கீழ்வரும் ஆவணங்களையும் பேணுமாறும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் கீழ் பதிவுகளைப் பேணிக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(i) ஒப்படைப்பு விலையிடல் ஒழுங்குவிதிகள் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதி

(ii) இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்கள் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

(iii) நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்கள்

(iv) இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி திட்டம் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டி

(v) மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரம் தொடர்பில் 2016 ஆம் ஆண்டின் மே 02 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் பெசேவ பதிவு செய்தலினைப் பெற்றுக் கொண்டுள்ள ஆட்களினால் கோரத்தக்கதாக கருதப்பட்ட உள்ளீட்டு வரவு தொடர்பில் அரசாங்க அறிவித்தலின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதி

(vi) பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 25 ஓ பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

(vii) தேசக் கட்டுமான வரி, வருமான வரி அல்லது வேறு ஏதேனும் வரி வகைகளுக்கான புரள்வுடன் பெசேவ நோக்கங்களுக்கான புரள்வு/வழங்கல்களின் பெறுமதியினைக் கணக்கிணக்கம் செய்தல்.

18. அச்சுப்பிரதிகளாகவோ அல்லது மென்பிரதிகளாகவோ இருந்தாலும் சரி அனைத்துப் பதிவேடுகளும் அத்தகைய பதிவுகளுடன் தொடர்புடைய வரி விதிக்கத்தக்க காலப்பகுதியின் இறுதியிலிருந்து ஐந்து வருட காலப்பகுதிக்குப் பேணிப் பாதுகாக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், பதிவு செய்யப்பட்ட ஆளொருவரினால் ஏற்புடைய காரணங்களைக் குறிப்பிட்டு மேற்கொள்ளப்படும் விண்ணப்பம் தொடர்பில் மேற்குறித்த ஐந்து வருட காலப்பகுதிக்கு முன்னதாகவே அத்தகைய பதிவேடுகளினை அழிப்பதற்கு அத்தகைய ஆளுக்கு ஆணையாளர் நாயகம் அனுமதியளிக்கலாம்.

19. இத்தகைய ஒழுங்குவிதிகளில் தேவைப்படுத்தப்பட்டாலன்றி -

"சட்டம்" என்பது 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதி சேர் வரிச் சட்டத்தினைக் குறிப்பிடுகின்றது.

"வரி" என்பது சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க பெறுமதி சேர் வரியினைக் குறிப்பிடுகின்றது.

"உதவி ஆணையாளர்" என்பது பிரதி ஆணையாளர் மற்றும் சிரேஷ்ட பிரதி ஆணையாளர்கள் ஆகியோரினைக் குறிப்பிடுகின்றது.

*இணைப்பு*

## செலுத்தத்தக்க வரி தொடர்பான பதிவேட்டுப் படிவம்

------------------------------ இருந்து ------------------------------------------ வரையிலான காலப்பகுதிக்கானது

| | *மாதம் 1* | *மாதம் 2* | *மாதம் 3* |
|---|---|---|---|
| **வெளியீட்டு வரி** | | | |
| வழங்கல் பெறுமதி | | | |
| **கழி**: பதிவளிக்கப்பட்ட அறவிட முடியாக்கடன் | | | |
| **கூட்டு** : முன்னர் பதிவளிக்கப்பட்டதன் மீது அறவீடு செய்யப்பட்ட அறவிட முடியாக்கடன் | | | |
| சீராக்கப்பட்ட வழங்கல் பெறுமதி | | | |
| **செலுத்தத்தக்க வரி - வெளியீட்டு வரி** | | | |
| **கிழி**: வழங்கப்பட்ட/பெறப்பட்ட வரவுத் தாள்கள் மீதான வரி | | | |
| தேறிய செலுத்தத்தக்க வரி | | | |
| **உள்ளீட்டு வரி** | | | |
| உள்ளூர் விலைப்பட்டியல்கள் மீது கழிக்கத்தக்கதான உள்ளீட்டு வரி | | | |
| இறக்குமதிகள் மீது கழிக்கத்தக்கதான உள்ளீட்டு வரி | | | |
| பிற்போடப்பட்ட இறக்குமதிகள் மீது பெறத்தக்க வரவு வவுச்சர் | | | |
| **கூட்டு** : பெறப்பட்ட வரவுத் தாள்கள் மீதான வரி | | | |
| **கழி**: பெறப்பட்ட வரவுத் தாள்கள் மீதான வரி | | | |
| **கோரத்தக்க மொத்த உள்ளீட்டு வரி** | | | |
| பிற்போடுகையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிகள் மீது | | | |
| முற்பணக் கொடுப்பனவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிகளின் மீது | | | |
| உள்நாட்டு கொள்வனவின் மீது | | | |
| **தேறிய செலுத்தத்தக்க வரி** | | | |
| **கழி: வரவுகள்** | | | |
| முன்னைய விபரத்திரட்டுக்களிலிருந்து கீழ்க் கொண்டு வரப்பட்ட | | | |
| உள்வாங்கப்படாத உள்ளீட்டு வரி மற்றும் முன்னைய விபரத்திரட்டுக்களிலிருந்து | | | |
| உள்ளீட்டு வரியின் மிகையான | | | |
| கோரிக்கை மீது கழிப்பனவு செய்யப்பட்ட வரிக் கணிப்பீடு | | | |
| உபாய அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட வழங்கல்கள் கருதப்பட்ட வரி விதிக்கத்தக்க வழங்கல்களின் மீதான வரவு | | | |
| விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட கருதப்பட்ட வரி விதிக்கத்தக்க வழங்கல்கள் மீதான வரவு | | | |
| இடைநிறுத்தப்பட்ட வழங்கல்கள் மீதான வரவு | | | |
| 2010.12.31 இலுள்ளவாறான உள்ளடக்கப்படாத வரியிலிருந்து கோரப்பட்ட வரவுகள் | | | |
| வரிவிதிக்கத்தக்க காலப்பகுதிக்கான செலுத்தத்தக்க பெறுமதி சேர் வரிக்கெதிரானது | | | |
| ஆணையாளர் நாயகத்தினால் நிருவகிக்கப்படும் வரிக்கெதிரானது | | | |
| சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்குச் செலுத்தத்தக்க வரிகளுக்கெதிரானது | | | |
| தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்கு செலுத்தத்தக்க வரிகளுக்கெதிரானது | | | |
| மொத்த விற்பனையில் அல்லது சில்லறை வியாபாரத்தில் பொருட்களை விற்பனை செய்கின்றவர்கள் 2016 மே 02 ஆந் திகதிக்குப் பின்னர் பெறுமதி சேர் வரிகளுக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஆளொருவரினால் பதிவு செய்யப்படாத ஆளொருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மீதான கருதப்பட்ட உள்ளீட்டு வரவு | | | |

*11 - 522*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.